1971 ஜூலை 30]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 1964-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் 1,19,304 பேர்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்சம் பேர்கள் வருவதாக அங்கிருந்து தகவல் வந்திருக்கிறது. இதற்கான முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்கிறது. இவர்கள் புனர்வாழ்விற்குப் பல திட்டங்கள் இருக்கின்றன.

* 563 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether a number of Burma evacuees have arrived in Madras City in June 1971; and

(b) if so, the details of the places where they have been provided accommodation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) 502 சிறுர்கள் உட்பட 1,493 அகதிகள் 1971, ஜூன் 9-ஆம் நாள் அன்று வந்தனர். அவர்களுள், 162 சிறுர்கள் உட்பட 527 அகதிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கொட்டப்படில் உள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 92 சிறுர்கள் உட்பட 227 அகதிகள் கும்முடிபூண்டியிலுள்ள இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். 40 சிறுர்கள் உட்பட 96 அகதிகள், கீழப்புலியூரிலுள்ள நிலக்குடியேற்ற திட்டத்தின்கீழ் புதுவாழ்வு வசதிகள் அளிக்கப்படுவதற்காக திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பப்பட்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாத்தூரிலுள்ள ஆதரவற்ற மகளிருக்கான சிறப்பு இல்லத்தில் சேர்க்கப்படுவதற்காக ஒரு அகதி அனுப்பப்பட்டார். 27 சிறுர்கள் உட்பட 55 அகதிகளும், 13 காபின் பயணிகளும் அவரவர் விருப்பப்படி அவர்களுடைய உறவினர்களுடன் சேர்ந்து கொள்வதற்காக அனுப்பப்பட்டனர். பிற மாநிலங்களுக்குச் செல்வதற்காக இருந்த எஞ்சிய அகதிகள் அவரவர்களுடைய மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அம்மையார் தொகுதியிலுள்ள பர்மா அகதிகளுக்கு புதிதாக வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா? அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும்.

புதிய பிச்சைக்காரர் இல்லங்கள்.

* 564 வினு—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் புதிய பிச்சைக்காரர் இல்லங்கள் (Beggar Homes) திறக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், வேலூரில் ஒரு பிச்சைக்காரர் இல்லம் திறக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இல்லை. எனினும் வட ஆற்காடு மாவட்டத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக் கென்று ஒரு இல்லம் திறக்கும் திட்டம் அரசின் ஆலோசனையில் உள்ளது.

திரு. மா. பா. சாரதி : ஏற்கனவே இந்தப் பிச்சைக்காரர்கள் விடுதி வேலூரில் கட்டுவதற்காக அரசிடம் கோரப்பட்டுள்ளது. அப்படி இப்போது இல்லை யென்றாலும் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ள பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு திட்டத்தின் அடிப்படையிலாவது வேலூரில் பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் ஒரு இல்லத்தை அமைக்க அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பானூர், உளுந்தூர்பேட்டை, வரகூர் இம் மூன்று இடங்களில் கட்டுவதற் கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கான நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளன. வேலூரில் கட்டுவதற்கு உத்தேசம் இருக் கிறது. அதுபற்றிய செயற்குறிப்பு அனுப்பப்பட்டவுடன் கட்டப் படும்.

குப்பல் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் : மதுரையில் ஏற்கனவே பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து ஒரு பெரிய பிச்சைக்கார விடுதிக்குக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. நகரசபையிலிருந்து போதுமான நிதி உதவி அதற்குச் செய்ய முடியாத நிலையில் அங்கு அதிகப்படியான பிச்சைக்காரர்களுக்கு இடம் தர முடியவில்லை. ஆகவே, அரசாங்கத்திலிருந்து போதிய அளவு பணம் அதற்காகக் கொடுத்து ஏற்கனவே உள்ள அந்த விடுதியை நல்ல முறையில் நடத்துவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதுரையில் அப்படி ஒன்று இருப்பதாகத் தகவல் இல்லை. போலீஸ் இலாகா மூலம் பிடித்து, சென்னையில் மீனம்பாக்கத்திலும், காஞ்சீபுரத்திலும் பிச்சைக்காரர்கள் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. தனியார், தயா சதன் என்ற இல்லத்தை நடத்துகிறார்கள். ஆறு முனிசிபாலிட்டி களில், உதகை, செங்கல்பட்டு, விருதுநகர், திருச்சி, கோவை, நாகர் கோவில் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறார்கள். குறிப்பாக சிதம்பரத்தில் உள்ள இல்லத்திற்கு அரசாங்கம் நிதி உதவி செய்கிறது. வேறு செயற்குறிப்பு இப்போது இல்லை.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any survey of beggars has been taken in this regard?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படி எடுக்கப்பட்டுத்தான் கிட்டத்தட்ட 60,000 பிச்சைக்காரர்கள் இருப்ப தாகக் கூறப்படுகிறது. அதில் ஏறத்தாழ 6,000, 8,000 வரையில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

Dams

* 565 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the stage of construction of the dam across Kudamudayar river for supply of water in the tanks in Valliyur and Radhapuram areas?